**கரந்தெனிய பிரதேச சபை - 2023**

---------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கரந்தெனிய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கரந்தெனிய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய நிலையான வைப்புக்களின் வட்டி ரூபா 1,112,907 தொகை குறைவாக மற்றும் செலுத்த வேண்டிய நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் ரூபா 219,778 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மூலதனப்படுத்தப்பட வேண்டிய பெறுமதி ரூபா 74,500 இற்கான நிலையான சொத்துக்கள் மூலதனப்படுத்தப்பட்டு இருக்காததுடன், மூலதனப்படுத்த முடியாத ரூபா 51,890 பெறுமதியான உதிரிப் பாகங்கள் மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | - மேற்படி - |
| (இ) | உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய பங்களிப்புத் தொகைக்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 12,702,185 இற்கான மீதிக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொண்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | - மேற்படி - |

**1.6.2 கணக்காய்விற்கு எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 13,135,635 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியவில்லை. | பழைய ஏடுகளை பரிசோதனை செய்து ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 388 மற்றும் 389 | வழங்கப்பட்ட ரூபா 1,498,152 தொகை பெறுமதியான 26 காசோலைகள் பெற்றுக் கொண்ட தரப்பினர்களிடம் தகவல்கள் ஆவணப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7.2 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயலாளரினால் தொகுதிப் போக்குவரத்து வசதிகளின்றி ஒரு நாளைக்கு வீட்டுக்கும் அலுவலகத்திற்கும் இடையே பிரயாணம் செய்வதற்காக சபையின் வாகனத்தை பயன்படுத்தியிருந்ததுடன், எரிபொருளுக்காக ரூபா 800,139 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 2,020,062 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 56,352,864 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 4,168,798 | 4,741,920 | 5,108,424 | 5,620,998 | 3,578,798 | 2,955,934 | 3,219,079 | 5,987,502 |
| வாடகை | 8,910,350 | 6,659,850 | 9,887,267 | 4,306,404 | 7,893,230 | 6,481,989 | 7,548,540 | 7,533,821 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 450,100 | 422,597 | 398,597 | 149,350 | 400,100 | 172,935 | 172,935 | 125,350 |
| ஏனைய வருமானங்கள் | 11,883,000 | 8,463,326 | 8,460,326 | 48,192 | 8,376,600 | 7,868,597 | 7,868,597 | 45,192 |
| மொத்தம் | 25,412,248 | 20,287,693 | 23,854,614 | 10,124,944 | 20,248,728 | 17,479,455 | 18,809,151 | 13,691,865 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 13,691,865 தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 10,124,944 தொகையாக காணப்பட்டது. 2023 ஆண்டிற்காக எதுவித வீதவரியும் செலுத்தாத 1127 | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானத்தை சேகரிக்கும் முன்னேற்றத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அலகுகள் காணப்பட்டதுடன், அந்த அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வீதவரி மீதி ரூபா 3,817,535 தொகை காணப்பட்டது. | | |
| (ஆ) | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் 40 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் காணப்பட்டதுடன் அவற்றில் 37 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இருந்து பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவிற்கு இணங்க முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என இனங்காணப்பட்டு வீதவரி அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர் வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை இனங்காணப்பட்டு வரி விதிக்கப்பட வேண்டும். |
| (இ) | வீதவரி மதிப்பீடு 2008 ஆண்டு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் புதிய மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படாமையால் சபைக்கு உழைக்கக் கூடியதாக இருந்த வருமானத்தை இழத்தல் ஒன்று ஏற்பட்டிருந்தது. | பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர் வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தற்போதைய பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருமானம் அறவீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | மஹஏதன்ட சந்தைக் காணியில் 17 ஆம் இலக்க கடையறை 2018 ஜூலை மாதத்திலிருந்து வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் சபைக்கு ரூபா 83,700 இற்கான வாடகை வருமானம் ஒன்று இழந்துள்ளது. | டெண்டர் பண்ணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடையறைகளை டெண்டர் பண்ணி வாடகை அறவீடு செய்ய வேண்டும். |
| (உ) | சபைக்கு சொந்தமான 02 கடையறைகளிலிருந்து 2013 ஆண்டிற்கு முன்னரிருந்து ரூபா 295,368 இற்கான தொகையொன்று நிலுவையாக காணப்பட்டதுடன், 122 கடையறைகளின் உடன்படிக்கைகள் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | நீண்ட கால நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 2015 ஆண்டின் போது கடைகள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், 198 கடையறைகள் பெறுமதி மதிப்பீடு திருத்தம் மேற்கொண்டிருக்காமையால் பெற வேண்டிய வாடகை வருமானம் சபை இழந்துள்ளது. | பெறுமதி மதிப்பீட்டுத் திருத்தம் மேற்கொள்வதற்கு விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. | கடையறைகளின் தற்போதைய பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து வருமானம் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | பொருத்தப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்த விளம்பர அறிவித்தல் பலகைகள் 158 இற்காக ரூபா 1,114,950 இற்கான கட்டணம் ஒன்று மீளாய்வாண்டின் போது அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 325,000 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 9,332,054 தொகையாக இருந்தது. | முத்திரைக் கட்டணம் ரூபா 2,238,138 தொகை அறவிடப்பட வேண்டியுள்ளது என. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 4 அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை சட்ட ரீதியாக்கும் நடவடிக்கை எடுத்தல் அல்லது அணவல் அங்கீகாரம் வழங்கக் கூடிய கட்டிடங்கள் தொடர்பாக ரூபா 2,580,000 இற்கான கட்டணம் அறவீடு செய்து அணவல் அங்கீகாரம் வழங்குவதற்காக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊருகஸ்மன்ஹந்திய நீர் செயற்திட்டத்தின் நீர் நுகர்வோர்களிடம் நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 1,148,760 தொகையினை அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் இந்த செயற்திட்டத்தின் 139 நீர் மானிகள் செயற்படாது இருந்தது. | நிலுவை பில் பத்திரத் தொகையில் 50% அறவிட முடியுமெனவும் செயற்படாத நீர் மானிகளை திருப்பப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நீர் மானிகளை செயற்படு நிலைமைக்கு மாற்ற வேண்டியதுடன் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 2001 ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டு இருந்ததுடன் குருந்துகஹ ஹெதெக்மவில் அமைந்துள்ள பாதியளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ள கட்டிடம் 20 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் சுற்றாடலுக்கு திறந்த நிலையில் காணப்படுவதனால் தீராந்தி மாடி (slab) ஈரமடைந்து கொங்கிரீட்கள் பலவீனமடைந்து ஆபத்து நிலைமை ஒன்று காணப்பட்டதுடன் 20 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் பாதியளவு பூர்த்தி செய்யப்பட்டிருந்த இந்த கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டது. | பிரதான பொறியியலாளரிடம் ஆலோசனைகள் பெற்று தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 09 வருடங்களுக்கும் 35 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் காணப்படுகின்ற ஊழியர் கடன் ரூபா 166,140 தொகையினை அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |